04.06.2016

தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**நத்தம் பகுதியில் பலத்த மழை**

நத்தம் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் வெள்ளிக்கிழமை பலத்த மழை பெய்தது.

திண்டுக்கல் மாவட்டம், நத்தம், உலுப்பக்குடி, செந்துறை, பரளி, சமுத்திராப்பட்டி, கோபால்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் இடி, மின்னலுடன் பலத்த மழை பெய்தது.

அப்போது சூறைக் காற்று வீசியதால், பல இடங்களில் மரங்கள் முறிந்து விழுந்தன.

திண்டுக்கல்- நத்தம் பிரதான சாலையில், சேர்வீடு பகுதியில் மரம் முறிந்து விழுந்ததால் 20 நிமிடங்களுக்கும் மேல் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. அதேபோல், நத்தம் பேருந்து நிலையப் பகுதியில் வைக்கப்பட்டிருந்த விளம்பர தட்டிகளும் சூறைக் காற்றினால் சேதமடைந்தன. நத்தம் தீயணைப்பு நிலையத்துக்குள் புகுந்த மழைநீரை குடங்களில் சேகரித்து தீயணைப்பு வீரர்கள் வெளியேற்றினர்.

மேலும் சூறைக் காற்றால் நத்தம், சமுத்திராப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் 40 நிமிடங்கள் மின் விநியோகம் துண்டிக்கப்பட்டது.

## முருங்கைக்காய் விலை உயர்வு: விவசாயிகள் மகிழ்ச்சி

ஆண்டிபட்டி மற்றும் அதனைச் சுற்றியுள்ள திம்மரசநாயக்கனூர், பொம்மிநாயக்கன்பட்டி, கண்டமனூர், கடமலைக்குண்டு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் குச்சி முருங்கை பயிரிடப்பட்டுள்ளது. இந்நிலையில், இப்பகுதியில் ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் போதிய அளவு மழை இல்லாததாலும், பனியின் தாக்கம் அதிகம் இருந்ததாலும் பூக்கள் உதிர்ந்து மிகக் குறைந்த பூக்களே பூத்தன. எனவே முருங்கைக்காய் வரத்து குறைந்தே காணப்பட்டது. கடந்த ஆண்டு மே, ஜூன் மாதங்களில் ஒரு கிலோ முருங்கைக்காய் ரூ.2 முதல் ரூ.3 வரை விற்பனையானது. தற்போது கிலோ ரூ.35முதல் ரூ.38 வரை விற்பனையாவதால் விவசாயிகள் மகிழ்ச்சிடைந்துள்ளனர்.

கண்டமனூரைச் சேர்ந்த விவசாயி ராசு கூறுகையில், மழை இல்லாததால் தண்ணீரை விலைக்கு வாங்கி முருங்கையை காப்பாற்றியுள்ளோம். இதனால் தற்போது ஓரளவு விலை கிடைக்கிறது. மேலும் ஆண்டிபட்டி பகுதியில் முருங்கைக் காய்களுக்கு சீரான விலை கிடைக்க, முருங்கைக் காய் பவுடர் தொழிற்சாலை தொடங்க வேண்டும் என்றார்.

## கோவையில் பேரீச்சம் பழம் கண்காட்சி: 3 நாள்கள் நடக்கிறது

கோவையில் முதல்முறையாக ரம்ஜான் பண்டிகையையொட்டி 108 ரகங்களைக் கொண்ட பேரீச்சம் பழக் கண்காட்சி நடைபெறுகிறது.

கோவை செல்வபுரத்தில் வெள்ளிக்கிழமை தொடங்கிய இக்கண்காட்சி ஞாயிற்றுக்கிழமை (ஜூன் 5) வரை நடைபெறுகிறது. பேரீச்சம் பழம் உட்கொள்வது மூலம் சத்துப் பொருள்களை எளிதாக உடலில் சேர்க்க முடியும். இதில் வைட்டமின்கள், தாதுக்கள் மற்றும் சத்துப் பொருள்கள் அதிகம் நிறைந்துள்ளன.

சீரான உடல் வளர்ச்சிக்கும், உடல் நலத்துக்கும் பேரீச்சம் பழத்தை அவசியம் உட்கொள்ள வேண்டும்.

பேரீச்சையில் உள்ள நார்ச்சத்துக்கள் எளிதாக ஜீரணம் அடைய உதவும். இதன் மூலம் புத்துணர்ச்சியும், சக்தியும் உடலுக்கு கிடைக்கிறது. ரத்தத்திற்கு சிகப்பு நிறம் வழங்கும் ஹீமோகுளோபின் உருவாக்கத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது.

இக்கண்காட்சியில், பேரீச்சம் பழத்தின் பயன்பாடுகள் மற்றும் வெளிநாடுகளில் உற்பத்தி செய்யப்படும் அரிய வகை கருப்பு மற்றும் பிரவுன் நிற பேரீச்சம் பழங்கள் உள்பட 108 வகையான பேரீச்சம் பழங்கள் இடம்பெற்றுள்ளன.

## ஆதிரெங்கத்தில் 10-வது ஆண்டு தேசிய பாரம்பரிய நெல் திருவிழா தொடக்கம்



**திருத்துறைப்பூண்டி:** திருவாரூர் மாவட்டம், ஆதிரெங்கத்தில் இன்று தொடங்கிய 10-வது ஆண்டு தேசிய பராம்பரிய நெல் திருவிழாவில் கிச்சலி சம்பா, கைவர சம்பா, சீங்கினிகார், மடுமுழுங்கி, இழுப்பப்பூ சம்பா, மாப்பிள்ளை சம்பா, குழியடிச்சான் உள்ளிட்ட பராம்பரிய நெல் ரகங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

ஆதிரெங்கம் கிராமத்தில் உள்ள இயற்கை வேளாண்மை பண்ணையில் 10-வது பாரம்பரிய தேசிய நெல் திருவிழா சனிக்கிழமை தொடங்கியது.

இந்த நெல் திருவிழாவின் நோக்கம் குறித்தும் ,பாரம்பரிய நெல் வகைகள் அழியாமல் பாதுகாக்க தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வரும்

நடவடிக்கைகள் குறித்தும், அதற்கு விவசாயிகள் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்தும் நெல்.ஜெயராமன் விளக்கிப்பேசினார்.

கருத்தரங்க வளாகத்தில் கிச்சலிசம்பா, கைவரசம்பா, சீங்கினிகார், மடுமுழுங்கி, இழுப்பப்பூசம்பா, மாப்பிள்ளைசம்பா, குழியடிச்சான், கொட்டார சம்பா, தூயமல்லி, காட்டுபயானம் உள்ளிட்ட பராம்பரிய நெல் ரகங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது.

கடந்த ஆண்டு நெல் திருவிழாவில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு பராம்பரிய நெல் 2 கிலோ வழங்கப்பட்டதற்கு மாற்றாக மீண்டும் நான்கு கிலோவாக நெல் விதையை விவசாயிகள் கொண்டு வந்து ஒப்படைத்தனர்.

விழாவில் விழுப்புரம் மாவட்டம் சங்கீதமங்கலத்தை சேர்ந்த மரம் கருணாநிதி தன்னுடைய சொந்த செலவில் சந்தனம், செம்மரம், கொன்றை, அரசு, உள்ளிட்டஆயிரம் மரக்கன்றுகளை இலவசமாக வழங்கினார்.

திருவிழாவில் இயற்கை விவசாயம் தொடர்பான பல்வேறு அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தது. இரண்டு நாள்கள் நடைபெறும் இத்திருவிழா நாளை (ஞாயிற்றுக்கிழமை, ஜூன் 5) நிறைவடைகிறது.

## மலிவான விலையில் மல்லிகைப்பூ:கிலோ ரூ.10-க்கு விற்பனை

மழைக்காரணமாக மல்லிகைப்பூ அதிகமாக வரத்தொடங்கியதால், ஸ்ரீரங்கம் சாத்தாரவீதியில் உள்ள பூ சந்தையில் வெள்ளிக்கிழமை மாலை மல்லிகைப்பூ கிலோ ரூ. 10-க்கு விற்பனை செய்யப்பட்டது.

அவ்வாறு குறைந்த விலையில் விற்கப்பட்டாலும், வாங்குவார் இல்லாமல் மல்லிகைப்பூ பல இடங்களில் தேங்கிவிட்டது. கடந்த ஒரு வாரமாக மல்லிகைப்பூ பயிரிடும் பகுதியான எட்டரை, கோப்பு, கோசம்பட்டி உள்ளிட்ட பல பகுதிகளிலிருந்தும் மல்லிகைப்பூ வரத்து அதிகம் இருந்தது. இதனால், கடந்த சில வாரமாக கிலோ 100 ரூபாயிலிருந்து படிப்படியாகக் குறைந்து, வெள்ளிக்கிழமை மாலை கிலோ ரூ. 10-க்கு மல்லிகைப்பூ விற்கத்தொடங்கியது.

இதுகுறித்து மல்லிகைப்பூ பயிரிடும் விவசாயி சக்திவேல் கூறுகையில், தற்போது விற்கும் விலையால் எங்களுக்கு பெருத்த நஷ்டம்

ஏற்பட்டுள்ளது. மல்லிகைப்பூ பறிக்கும் கூலிக்கூட விற்கும் விலைக்கு கட்டிபடியாகாது.
பாதுகாத்து பயிரிட்டு பறிக்கும் மல்லிகைப்பூ இதே விலையில் தொடர்ந்து விற்றால், நாங்கள் மல்லிகைப்பூவை பறிக்காமல் அப்படியே விட்டுவிட வேண்டிய சூழ்நிலைதான் உருவாகும். மல்லிகைப்பூவை பறித்து அதை எடுத்துவரும் வாகனச் செலவுக்குக்கூட எங்களது கைகாசுதான் செலவாகிறது என்றார்.

## குறுவை சாகுபடி: திருச்சி வந்தது 2556 டன் உரம்

குறுவை சாகுபடிக்காக டெல்டா மாவட்டங்கள் உள்பட 8 மாவட்ட விவசாயிகளின் பயன்பாட்டுக்காக சரக்கு ரயில் மூலம் 2,556 டன் உரம் வெள்ளிக்கிழமை திருச்சி வந்தது.

ஒடிசா மாநிலம், பாரதீப் துறைமுகத்திலிருந்து இப்கோ நிறுவனத்தின் மூலம் சரக்கு ரயிலின் தனிப் பெட்டிகளில் 1,487 டன் டிஏபி உரம், 1,069 டன் 20:20:0:13 கலப்பு உரம் வெள்ளிக்கிழமை காலை திருச்சி வந்துசேர்ந்தது.

திருச்சி குட்ஷெட் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் சரக்கு ரயில்களிலிருந்து உரங்களை லாரிகளில் ஏற்றும் பணி உடனடியாகத் தொடங்கியது. இந்த உரம் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், திருச்சி, புதுக்கோட்டை, கரூர், பெரம்பலூர், அரியலூர் ஆகிய 8 மாவட்டங்களில் விவசாயத் தேவைக்காக அனுப்பிவைக்கப்படும்.

குறிப்பாக, டெல்டா மாவட்ட விவசாயிகளின் தேவைக்காக அந்தந்த மாவட்டங்களிலுள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்படும். அங்கிருந்து விவசாயத் தேவைக்கேற்ப வழங்கப்படும் என்று வேளாண் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## ஜூன் 28-ல் நாட்டுக்கோழி வளர்ப்பு பயிற்சி

வரும் ஜூன் 28-ல் பண்டுதகாரன்புதூரில் உள்ள கால்நடை பல்கலை. பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் நாட்டுக்கோழி வளர்ப்பு குறித்த பயிற்சி அளிக்கப்பட உள்ளதாக மையத்தின் தலைவர் பெ. வசந்தகுமார் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

இந்தப் பயிற்சியில் தொழில்முனைவோருக்கு கோழி வளர்ப்பு முறைகள், கொட்டகை அமைப்பு, தீவனப் பராமரிப்பு, நாட்டுக்கோழிகளை தாக்கும் நோய்கள், மரபுசார் மருத்துவ முறைகள், குடற்புழுநீக்கம், தடுப்பூசி அளித்தல் ஆகிய தலைப்புகளில் பயிற்சிகள் அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியில் பங்கேற்க விரும்புவோர் 04324-294335 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வரத்துக்குறைவால் வாழைப்பழம் விலை உயர்வு

சூறைக்காற்றுடன் பெய்த மழை, அதிகப்படியான வெயில் போன்ற காரணங்களால் வாழைப்பழம் உற்பத்தி குறைந்ததால் வாழைப்பழத்தின் விலை தற்போது இருமடங்காக உயர்ந்துள்ளது.

கரூர் நகரில், ரத்தினம் சாலையில் ஏராளமான வாழைக்காய் மண்டிகள் உள்ளன. இந்த மண்டிகளுக்கு திருச்சி மாவட்டம் காட்டுப்புத்தூர், நாமக்கல் மோகனூர், புதுப்பாளையம், பாண்டமங்கலம், கரூர் மாவட்டம் குளித்தலை, லாலாப்பேட்டை, மகாதானபுரம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வாழைக்காய்கள் கொண்டுவரப்பட்டு அவை ஏலத்தில் விடப்பட்டு வியாபாரிகளுக்கு விற்பனை செய்யப்படுகிறது. கடந்த ஒரு வாரத்தில் வாழைக்காய் மற்றும் பழத்தின் விலை எப்போதும் இல்லாத அளவிற்கு இருமடங்காக உயர்ந்துள்ளது.

இதுதொடர்பாக வாழைக்காய் மண்டி உரிமையாளர் சுப. இராசகோபால் கூறுகையில், கடந்த மாதம் காற்றுடன் மழை பெய்ததால் ஏராளமான வாழை மரங்கள் சாய்ந்துவிட்டன. மேலும் கடந்த இருமாதமாக வெயிலின் தாக்கமும் அதிகமாக இருந்ததால் விளைச்சல்

பாதிக்கப்பட்டது. இதனால் வாழைக்காய் மண்டிகளுக்கு கடந்த இரு மாதங்களுக்கு முன்பு 4 லாரிகளில் காய் மற்றும் பழம் வரும். அதாவது 1000 தார்கள் வரும். ஆனால் கடந்த ஒருவாரமாக இரண்டு லாரிகளில் மட்டுமே வருகின்றன. அதாவது 300 தார்கள் கூட வருவதில்லை. வரத்து குறைந்துள்ளதால் வாழைத்தார் விலை அதிகரித்துள்ளது. கடந்த 2 மாதத்துக்கு முன்பு ரஸ்தாளி தார் ரூ. 200 முதல் 250-க்கு விலை போனது. தற்போது ரூ. 400-550-க்கும், ரூ.200 என்ற அளவில் விலை போன பூவன் தற்போது ரூ. 450-க்கும், கற்பூரவள்ளி ரூ.250-க்கு போனது தற்போது ரூ. 450-க்கும், பச்சைலாடன் ரூ. 150- 200-க்கு விலை போனது, தற்போது ரூ. 200 - 350 வரை விலை போகிறது என்றார்.

## பண்டுதகாரன்புதூரில் ஜூன் 21-ல் கறவை மாடு வளர்ப்புப் பயிற்சி

கரூர் மாவட்டம் மண்மங்கலம் பண்டுதகாரன்புதூரில் அமைந்துள்ள கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் ஜூன் 21-ம் தேதி தொழில்முனைவோருக்கு கறவை மாடு வளர்ப்பு பயிற்சி நடைபெற உள்ளது.

பயிற்சியில் அறிவியல் ரீதியில் மாட்டினங்களை தேர்வு செய்தல் மற்றும் இனப்பெருக்கம், மாடுகள் வளர்ப்பு பராமரிப்பு முறைகளான பரண் மேல் கொட்டகை அமைப்பு, தீவன மேலாண்மை, மாடுகளுக்கேற்ற பசுந்தீவன உற்பத்தி, மேய்ச்சல் தரை அமைப்பு, மாடுகளை தாக்கும் நோய்கள் மற்றும் அவற்றை தடுக்கும் முறைகள், மூலிகை மருத்துவச் சிகிச்சை முறைகள், அசோலா வளர்ப்பு, மலிவு விலை கலப்பு தீவனம் தயாரித்தல், பண்ணைப் பொருளாதாரம், விற்பனை உத்திகள், வங்கிக்கடனுதவி, பண்ணைக்கான காப்பீடு ஆகிய தலைப்புகளில் பயிற்சியளிக்கப்படும்.

பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புவோர் 04324 - 294335, 7339057073 ஆகிய எண்களில் தொடர்பு கொண்டு பெயர் முன்பதிவு செய்து கொள்ளலாம் என கரூர் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத் தலைவர் பி. வசந்தகுமார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்றைய வேளாண் செய்திகள்

## கோவையில் மஞ்சள் விலை 4 மாதத்தில் குவின்டாலுக்கு ரூ.2 ஆயிரம் சரிவு

கோவை, : வட மாநிலங்களில் மஞ்சள் சாகுபடி அதிகரிப்பால் தமிழகத்தில் மஞ்சள் விலை கடந்த 4 மாதமாக குவின்டாலுக்கு ரூ.2 ஆயிரம் வரை சரிந்துள்ளதால் விவசாயிகள் கலக்கமடைந்துள்ளனர். தமிழகத்தில் ஈரோடு, திருப்பூர் மற்றும் கோவை மாவட்டத்தில் மஞ்சள் உற்பத்தி செய்யப்படுகிறது. இம்மாவட்டங்களில் சாகுபடி செய்யப்பட்ட மஞ்சள் ஜனவரியில் அறுவடை செய்யப்பட்டு, பின்னர் செய்நேர்த்திக்கு பின்னர் மார்ச், ஏப்ரல் மாதம் விற்பனைக்கு வருகிறது. உற்பத்தியாகும் மஞ்சள் குவின்டால் கணக்கில் விற்கப்படுகிறது.

ஒரு குவின்டால் மஞ்சள் ரூ.10 ஆயிரத்திற்கு குறையாமல் விற்றால் தான் அடக்கவிலை கிடைக்கும் என்கின்றனர் விவசாயிகள். ஆனால் கடந்த ஜனவரியில் ரூ.10 ஆயிரம் வரை விற்ற விலை, பின்னர் கடந்த 4 மாதமாக சரிந்து வருகிறது. தமிழகத்தில் ஈரோட்டிற்கு அடுத்தபடியாக கோவை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் மஞ்சள் விற்பனை ஏல முறையில் வாரத்திற்கு 2 நாள் நடக்கிறது.

இங்கு கடந்த ஜனவரியில் விரலி மஞ்சள் குவின்டால் குறைந்தபட்ச விலை ரூ.9,099க்கும், பிப்ரவரியில் விரலி மஞ்சள் ரூ.8,615க்கும், மார்ச் மாதத்தில் ரூ.9,400க்கும், ஏப்ரல் மாதத்தில் ரூ.9,300க்கும், மே மாதத்தில் ரூ.7,060க்கும் விற்று படிப்படியாக குவின்டாலுக்கு ரூ.2 ஆயிரம் வரை சரிந்துள்ளது.

அதே போல் கிழங்கு மஞ்சள் குறைந்தபட்ச விலை ஜனவரியில் ரூ.9,339க்கும், பிப்ரவரியில் ரூ.8,900க்கும், மார்ச் மாதத்தில்

ரூ.8,800க்கும், ஏப்ரல் மாதத்தில் ரூ.8,100க்கும், மே மாதத்தில் 7,709க்கு விற்று படிப்படியாக குவின்டாலுக்கு ரூ.1,600 வரை சரிந்துள்ளது. விலை சரிவால் விவசாயிகள் கலக்கமடைந்துள்ளனர். வட மாநிலங்களில் மஞ்சள் சாகுபடி அதிகரித்துள்ளதால், தமிழகத்தில் உற்பத்தியாகும் மஞ்சளுக்கு கிராக்கி குறைந்து, விலை சரிந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

## மலர் அலங்காரத்தை பாதுகாக்கும் பணியில் தோட்டக்கலைத்துறை

ஊட்டி, : நீலகிரி மாவட்டத்திற்கு நாள்தோறும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகின்றனர். எனினும், கோடை காலமான ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் அதிகளவு சுற்றுலா பயணிகள் வருகின்றனர். இங்கு வரும் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் ஆண்டுதோறும் தாவரவியல் பூங்காவில் மலர் கண்காட்சி நடத்தப்படுகிறது.

இந்த மலர் கண்காட்சியை காண ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகின்றனர்.

மலர் கண்காட்சியின் போது, மலர்களை கொண்டு பல்வேறு அலங்காரங்கள் செய்யப்படுகிறது. இம்முறை நடந்த மலர் கண்காட்சியின் போது, சென்டரல் ரயில் நிலையத்தின் மாதிரி வடிவம் ரோஜா மலர்களை கொண்டு செய்யப்பட்டிருந்தது. அதேபோல், இரண்டு சிட்டுக்குருவி அலங்காரமும் மலர்களால் செய்யப்பட்டிருந்தது. இதனை கண்டு சுற்றுலா பயணிகள் மகிழ்ந்தனர்.

மே மாதம் முடிந்த நிலையில், தற்போது பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளதால் ஊட்டியை முற்றுகையிட்டிருந்த சுற்றுலா பயணிகள் கடந்த ஞாயிற்று கிழமை சொந்த ஊர்களுக்கு திரும்பினர். எனினும், வெளி மாநிலத்தை சேர்ந்த சுற்றுலா பயணிகள் தொடர்ந்து வந்த வண்ணம் உள்ளனர். இதனால், சுற்றுலா பயணிகள் கூட்டம் குறையாமல் காணப்படுகிறது. சுற்றுலா பயணிகள் வருகை குறையாமல் உள்ளதால், அவர்களை மகிழ்விக்கும் பொருட்டு மேலும் சில நாட்கள் தாவரவியல் பூங்காவில் உள்ள மலர் அலங்காரங்களை அப்படியே வைக்க தோட்டக்கலைத்துறை திட்டமிட்டுள்ளது.

எனினும், இந்த மலர்கள் வாடாமல் இருக்க நாள்தோறும் தண்ணீர் பாய்ச்சி மலர்களை பாதுகாத்து வருகின்றனர். அதேபோல், உதிர்ந்த மற்றும் காய்ந்த மலர்களை அகற்றி வருகின்றனர். அதேசமயம் கடந்த ஒரு வார காலமாக ஊட்டியில் நாள் தோறும் மழை பெய்து வரும் நிலையில் பூங்காவில் செடிகளில் உள்ள மலர்கள் மற்றும் ரோஜா பூங்காவில் உள்ள மலர்கள் தற்போது உதிரத்துவங்கியுள்ளன. தொடர் மழை பெய்தால், பூங்காவில் உள்ள மலர்கள் உதிரும் நிலை உருவாகியுள்ளது.

## மழை குறைவு காரணமாக டேன் டீ நிறுவனத்தில் 25 லட்சம் கிலோ பசுந்தேயிலை மகசூல் குறைவு

குன்னூர், : தமிழக அரசு சார்பில் டேன் டீ நிறுவனம் செயல்பட்டு வருகிறது. குன்னூர், கோத்தகிரி, கூடலூர், பந்தலூர், வால்பாறை உள்ளிட்ட பகுதிகளில் 4,311 ஹெக்டர் பரப்பளவில் தேயிலை செடிகள் பயிரிடப்பட்டு தாயகம் திரும்பிய தமிழர்களுக்காக 8 கோட்டங்களில் 8 தொழிற்சாலைகளும் செயல்பட்டு வருகிறது.

இதில் 4500 நிரந்தர பணியாளர்கள், 1500 பணியாளர்கள் உள்ளனர். இந்த நிறுவனத்தில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு தனியார் எஸ்டேட் தொழிலாளர்களை விட ரூ.6 சம்பளம் குறைவாக வழங்கப்படுகிறது. இருப்பினும் அரசு சார்பில் தொழிலாளர்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் மேற்கொள்ளப்படுவதுடன் காலம் தாழ்த்தாமல் குறித்த தேதியில் சம்பளம் உள்ளிட்ட அனைத்து பணப்பலன்களும் வழங்கப்பட்டு வருவதாக டேன் டீ பொது மேலாளர் ராகேஷ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில்: தொழிலாளர்களுக்கு சம்பளம் ரூ.6 குறைவாக கொடுத்தாலும் ஆண்டுதோறும் குறிப்பிட்ட படி 20 சதவீத போனஸ் வழங்கப்படுகிறது. தற்போது போதிய மழை இல்லாததால் தேயிலை மகசூல் வெகுவாக குறைந்துள்ளது. கடந்தாண்டை விட இந்தாண்டு ஏப்ரல் மே மாதங்களில் மட்டும் 25 லட்சம் கிலோ பசுந்தேயிலை மகசூல் குறைந்துள்ளது.

பருவ மழை துவங்கி உள்ளதால் தற்போது நாள் ஒன்றுக்கு 9500 கிலோ வரை பசுந்தேயிலை கிடைக்கிறது. குன்னூர், கோவை, கொச்சின் உள்ளிட்ட ஏல மையங்கள் மூலம் தேயிலை தூள் விற்பனை செய்யப்படுகிறது. புரோக்கர்கள் கலையீடு இன்றி நேரடியாக விற்பனை செய்வதாலும் தற்போது வரத்து குறைவு காரணமாகவும் குறைந்த பட்சம் தேயிலை தூள் கிலோ ஒன்றுக்கு ரூ.100 வரை விற்பனை செய்யப்படுகிறது. இதனால் டேன் டீ நிர்வாகத்தில் தற்போது நஷ்டத்திற்கு வாய்ப்பு இல்லை.

ஏற்கனவே அரசு சார்பில் ஒதுக்கப்பட்டு ரூ.30 கோடி நிதியில் தொழிலாளர் நலன் மற்றும் தொழிற்சாலைகள் மேம்படுத்தும் பணிக்கு பயன்படுத்தப்பட்டது. கடந்தாண்டு இதே காலக்கட்டத்தில் ஏல மையங்களில் 1 கிலோ தேயிலை தூள் ரூ.67 முதல் ரூ70 வரை விற்பனையானது குறிப்பிடத்தக்கது.

மேலும் குயின்சோலை தொழிற்சாலையில் கடந்த 2 ஆண்டுகளாக உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஏல மையத்திற்கு கொண்டு செல்லும் தேயிலை தூள் போக மீதமுள்ள தூள்களை பாக்கெட் மூலம் சில்லறை விற்பனை செய்து வருகிறோம். மேலும் தமிழகம் மட்டுமல்லாமல் ஒரிசா மாநிலத்திலும் டேன் டீ தேயிலை தூள் விற்பனை செய்யப்படுகிறது. இதனை தொடர்ந்து டெல்லியில் விற்பனை மையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றார்.

## பூண்டு விவசாயத்தில் ஈடுபட்டுள்ள விவசாயிகள்

ஊட்டி, : நீலகிரி மாவட்டத்தில் மழை துவங்கியுள்ள நிலையில், கேத்தி பாலாடா சுற்று வட்டார பகுதிகளில் 4 மாத பயிரான பூண்டு அதிகளவு பயிரிடப்பட்டுள்ளது. நீலகி ி மாவட்டத்தில் தேயிலைக்கு அடுத்தப்படியாக மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் சுமார் 7 ஆயிரம் ஹெக்டர் பரப்பளவில் பல்வேறு மலை காய்கறிகள் பயிரிடப்படுகிறது. இதில் அதிகபட்சமாக கேரட் 2200 ஹெக்டர் பரப்பளவிலும், உருளைகிழங்கு 1200 ஹெக்டர் பரப்பளவிலும், முட்டைகோஸ் 900 ஹெக்டர் பரப்பளவிலும் பயி ிடப்படுகிறது. 2700 ஹெக்டரில் பூண்டு

பயிரிடப்படுகிறது.

நீலகிரி மாவட்டத்தில் விளைவிக்கப்படும் காய்கறிகள் ஊட்டி மார்க்கெட் அல்லது மேட்டுப்பாளையம் மார்க்கெட்டுகளுக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து தமிழகத்தின் முக்கிய நகரங்களுக்கும், கேரளா, கர்நாடகா போன்ற அண்டை மாநிலங்களுக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றன. காய்கறிகள் விளையும் இடத்திலேயே தூய்மையாக கிடைப்பதால் விவசாயிகள் ஊட்டிக்கு வரும் சுற்றுலா பயணிகளும் அதிகளவு வாங்கி செல்கின்றனர்.

இந்நிலையில் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் தென்மேற்கு பருவமழை துவங்கும் சமயத்தில் விவசாயிகள் 4 மாத பயிரான பூண்டு பயிரிடப்படுவது வழக்கம். இந்நிலையில் மாவட்டத்தில் தற்போது மழை துவங்கியுள்ள நிலையில் கேத்தி பாலாடா, கொல்லிமலை, செலவிப்நகர் உள்ளிட்ட பகுதிகளில் பல ஏக்கர் பரப்பளவில் பூண்டு பயிரிட்டுள்ளனர். அவற்றிற்கு உரமிட்டு பராமரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இப்பயிர்கள் அக்டோபர் மாதத்திற்கு பின் அறுவடை செய்யப்படும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

## தென்னையை தாக்கும் செம்பான் சிலந்தியை கட்டுப்படுத்துவது எப்படி? வேளாண் உதவி இயக்குனர் விளக்கம்

சேதுபாவாசத்திரம், : தென்னையை தாக்கும் செம்பான் சிலந்தியை கட்டுப்படுத்தும் வழிமுறை குறித்து வேளாண் உதவி இயக்குனர் சாந்தி விளக்கமளித்துள்ளார்.சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) சாந்தி தெரிவித்துள்ளதாவது: தென்னையை தாக்கி அதிக பொருளாதார இழப்பை ஏற்படுத்தும் ஈரியோபைட் சிலந்தியை (செம்பான் சிலந்தி) மிகச் சிறிய வெளிர் பழுப்பு நிற தோற்றம் உடையவை. இச்சிலந்தி இளங்குரும்பைகளின் அடியில் இருந்து கொண்டு குரும்பையின் மென்மையான திசுக்களில் இருந்து சாற்றை உறிஞ்சி குடித்து உயிர் வாழ்கிறது.

1 முதல் 6 மாத இளங்குரும்பைகளில் சாற்றை உறிஞ்சுவதால் குரும்பைகள் வளர்ந்து இளம் காய்களாக மாறும்போது நீளவாக்கில் சிறு

சிறு வெடிப்புகள் தோன்றும். முற்றிய காய்களில் இப்பழுப்பு நிற திட்டுகள் தோன்றி நீளவாக்கில் பெரிய வெடிப்புகள் ஏற்படும். அதிலிருந்து பிசின்போன்ற திரவம் வெளிப்படும். மேலும் 4 மாத இளங்குரும்பைகள் உதிர்ந்துவிழும் வாய்ப்புள்ளது. இதனால் காய்களின் அளவு சிறுத்து, பருப்பின் அளவும் 10 முதல் 30 சதவீதம் வரை குறைந்து விடுகிறது. இத்துடன் தேங்காய் உரிப்பதும் கடினமாகிறது.

எண்ணிக்கை குறைவதில்லை. ஆனால் காய்களில் அளவு சிறுத்து விடுகிறது. இதனை கட்டுப்படுத்திட ஒரு மரத்திற்கு 1 வருடத்திற்கு யூரியா 1.300 கிலோ, சூப்பர் பாஸ்பேட் 2 கிலோ, பொட்டாஷ் 3.500 கிலோ, வேப்பம்புண்ணாக்கு 5 கிலோ, நன்கு மக்கிய தொழு உரம் 50 கிலோ மற்றும் நுண்ணூட்ட சத்துக்களான போராக்ஸ் 50கிராம், ஜிப்சம் 1 கிலோ, மெக்னீசியம் சல்பேட் அரை கிலோ இட வேண்டும். மேலும் அசார்டிராக்டின் 1 சத தாவர பூச்சிக்கொல்லி மருந்தை சிறு கைதெளிப்பான் மூலம் 45 நாட்கள் இடைவெளியில் 1 முதல் 6 மாத குரும்பைகளின் மேல் படும்படி குறைந்தது 3 முறை தெளிக்க வேண்டும். முதல் முறை அசார்டிராக்டின் 1 சத மருந்து 5 மில்லியை 1லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

இரண்டாவது முறை 30 மில்லி வேப்பஎண்ணையை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து அத்துடன் டீ பால் ஒட்டுதிரவம் சிறிதளவு சேர்த்து தெளிக்க வேண்டும். மூன்றாவது முறை அசார்டிராக்டின் 1 சத மருந்து 5 மில்லியை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். இந்த மருந்தை ஜனவரி முதல் ஜூன் மாதம் வரை உள்ள காலத்தில் தெளிப்பது நல்ல பலனை தரும் கைதெளிப்பான் கொண்டு தெளிக்க முடியாத உயரமான மரங்களுக்கு அசார்டிராக்டின் 10 மில்லி மருந்தை 10 மில்லி தண்ணீரில் கலந்து வேரில் கட்டி சிலந்தியின் சேதத்தை வெகுவாக கட்டுப்படுத்தலாம் என்று தெரிவித்துள்ளார்.

**நாகை மாவட்டத்தில் 6ம் தேதி முதல் பருத்தி ஏலம் துவக்கம் விவசாயிகளுக்கு அழைப்பு**

நாகை, : நாகை மாவட்டத்தில் வரும் 6ம் தேதி முதல் பருத்தி ஏலம் துவங்குகிறது. இந்த வாய்ப்பை பயன்படுத்தி கொள்ள விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.நாகை மாவட்டத்தில் குத்தாலம், மயிலாடுதுறை, சீர்காழி, செம்பனார்கோவில் ஆகிய ஊர்களில் உள்ள ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் வருகிற 6ம் தேதி முதல் பருத்தி ஏலம் துவங்குகிறது.

எனவே பருத்தி சாகுபடி செய்துள்ள விவசாயிகள், தங்கள் பருத்தியை சுத்தம் செய்து, உலர்த்தி தரமான பருத்தியை தரம் பிரித்தும், மற்ற பருத்தியை தனியாக பிரித்தும், ஒழுங்குமுறை விற்பனை கூடங்களுக்கு கொண்டு வந்து சரியான எடைக்கு இடைத்தரகர்கள் இல்லாமல் அதிக விலைக்கு விற்பனை செய்து பயன்பெறலாம். ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு பருத்தியை கொண்டு வரும்போது பிளாஸ்டிக் சாக்கில் கொண்டு வருவதை தவிர்க்க வேண்டும்.

செம்பனார்கோவில் விற்பனை கூடத்தில் பிற்பகல் 12 மணிக்கும், மயிலாடுதுறை விற்பனை கூடத்தில் ஒவ்வொரு திங்கட்கிழமை மாலை 4 மணிக்கும், குத்தாலம் விற்பனை கூடத்தில் வியாழன்தோறும் மாலை 4 மணிக்கும், சீர்காழி விற்பனை கூடத்தில் சனிதோறும் பிற்பகல் 12 மணிக்கும் ஏலம் நடைபெறும். இந்திய பருத்தி கழகம், திருப்பூர், கோவை, விழுப்புரம், தேனி, திண்டுக்கல், தஞ்சாவூர், கும்பகோணம் உள்ளிட்ட ஊர்களில் உள்ள ஸ்பின்னிங் மில் உரிமையாளர்களும் அதிகளவில் ஏலத்தில் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் விவரங்களுக்கு செம்பனார்கோவில் விற்பனை கூடத்தை 9865536852 என்ற செல்போன் எண், மயிலாடுதுறை மற்றும் குத்தாலம் விற்பனை கூடங்களை 9715151513 என்ற செல்போன் எண், சீர்காழி விற்பனை கூடத்தை 9488807274 என்ற செல்போன் எண்ணில் தொடர்பு கொண்டு அறியலாம். இவ்வாற நாகை விற்பனைக்குழு தனி அலுவலர் கிருஷ்ணமூர்த்தி, செயலாளர் தேவேந்திரன் ஆகியோர்

வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளனர்.

**காணாமல் போன கருங்குரங்கு மாம்பழம்**

நத்தம், :நத்தம் பகுதியில் சுமார் 10 ஆயிரம் ஏக்கருக்கு மேல் மாந்தோப்புகள் உள்ளன. இதில் கடந்த ஏப்ரல் மாதம் மாம்பழம் அறுவடை சீசன் தொடங்கியது. இந்நிலையில் கல்லாமை, சப்பட்டை, செந்தூரம், மல்லிகா, இமாம்பஜந்த் உள்ளிட்ட பல்வேறு ரகங்கள் அறுவடையாகி விற்பனைக்கு வந்த வண்ணம் உள்ளது. இதைதொடர்ந்து வழக்கமாக கிடைக்கும் கருங்குரங்கு என்ற அரிய வகை மாம்பழம் கடந்த வருடம் போலவே இந்த வருடமும் விளைச்சல் குறைவாகவே காணப்படுகிறது.

இருப்பினும் பொதுமக்களும், வாடிக்கையாளர்களும் கடைகளில் வந்து கருங்குரங்கு மாம்பழத்தை விரும்பி கேட்டு இல்லை என்றவுடன் ஏமாற்றத்துடன் செல்கின்றனர்.மேலும் மாம்பழம் மலச்சிக்கலை போக்குவதுடன், உடம்புக்கு தெம்பூட்டுவதும், சுறுசுறுப்பு தருவதும் உள்பட மருத்துவக்குணம் நிறைந்தது. அப்படியே அரிதாக விற்பனைக்கு இந்தப் பழம் வந்தாலும் ஏற்கனவே கடையில் சொல்லி வைத்திருந்தவர்கள் வாங்கி போய் விடுகின்றனர். நத்தம் பகுதியில் அரிதாக விளையும் இந்தப் பழம் இனிப்பும், மணமும், சுவையும் நிறைந்ததாகும். கருங்குரங்கு மாம்பழ மரம் கடும் வறட்சியினாலும், மருந்து தெளிப்புக்கு தாக்குப் பிடிக்காமலும் பல இடங்களில் பட்டுப் போய் விட்டது.

தமிழ்நாடு அரசு, தோட்டக்கலைத்துறை வருடந்தோறும் மாங்கன்றுகளை மானியத்திலும், இலவசமாகவும் வழங்கி வருகிறது. இப்படி பட்டுப்போன கருங்குரங்கு போன்ற மாங்கன்றுகளை தோட்டக்கலைத்துறையே வழங்கினால் மாம்பழப் பிரியர்களுக்கு உதவியாக அமையும். என்று மா விவசாயிகள் தெரிவித்தனர்.

**பயிர்களை பாதுகாக்க விதை நேர்த்தி அவசியம்**

பழநி, : பயிர்களை பாதுகாக்க விதை நேர்த்தி செய்வது அவசியம் என வேளாண்துறையினர் ஆலோசனை வழங்கி உள்ளனர்.பயிர்களை விதை மூலம் பரவக்கூடிய பூஞ்சான் நோய்களிலிருந்து பாதுகாப்பதற்கு விதையுடன் பூஞ்சான மருந்து கலந்து விதை நேர்த்தி செய்திட வேண்டும். விதை மூலம் பரவும் இலைப்புள்ளி, இலைக்கருகல், இலை உறை அழுகல் மற்றும் குலை நோய் போன்ற பூஞ்சான நோய்களை தடுக்க 1 கிலோ விதைக்கு 2 கிராம் வீதம் -"கார்பன்டைசிம்" கலந்து 24 மணி நேரம் வைத்திருந்து பின் விதைக்க வேண்டும்.

இல்லாவிட்டால் 1 கிலோ விதைக்கு 4 கிராம் வீதம் "டிரைக்கோ டெர்மாவிருடி" அல்லது 1 கிலோ விதைக்கு 10 கிராம் வீதம் "சூடோமோனாஸ் ப்ளாரசன்ஸ்" என்ற உயிரியல் பூஞ்சான மருந்தை விதைப்பதற்கு முன் கலந்து விதைக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு தேவையான விதைக்கு விதை நேர்த்தி செய்ய 10 ரூபாய் முதல் 20 ரூபாய் வரை செலவாகும்.

ஆனால், விதை நேர்த்தி செய்வதால், பயிர் வளர்ச்சி காலத்தில் நோய்கள் தாக்கி, அவற்றை கட்டுப்படுத்த மருந்திற்கு செலவு செய்ய வேண்டிய அவசியம் ஏற்படாது. நெல், சிறுதானியங்கள், பருத்தி, கரும்பு, எள் மற்றும் சூரியகாந்தி பயிர்களுக்கு விதை நேர்த்தி செய்வதற்கு ஒரு ஏக்கர் விதைக்கு அசோஸ்பைரில்லம் ஒரு பாக்கெட் ஆறிய வடிகஞ்சியில் கலந்து அதனுடன் பூஞ்சான விதை நேர்த்தி செய்த விதையை கலந்து நிழலில் 30 நிமிடம் உலர்த்தி பின்பு விதைக்க வேண்டும்.

நிலக்கடலை மற்றும் பயறு வகைகளுக்கு விதை நேர்த்தி செய்வதற்கு 1 ஏக்கர் விதைக்கு "ரைசோபியம்கல்ச்சர்" 1 பாக்கெட்டை ஆறிய வடிகஞ்சியில் கலந்து அதனுடன் பூஞ்சான விதை நேர்த்தி செய்த விதையைக் கலந்து நிழலில் 30 நிமிடம் உலர்த்தி பின் விதைக்க வேண்டும். உயிர் உர விதை நேர்த்தி செய்வதால், உயிர் உரங்கள் காற்றிலுள்ள தழைச்சத்தை கிரகித்து பயிருக்கு கொடுக்கும். அதனால் இளம் பயிரின் இலைகள் கரும்பச்சை நிறத்துடன் செழிப்பாக வளரும்.

பயிர்கள் கூடுதல் மகசூல் கொடுக்கும். இதனால் கால் பங்கு தழைச்சத்து இடுவதை குறைக்கலாம்.

அதன் மூலம் உரச் செலவை குறைக்கலாம். எனவே. விவசாயிகள் பூசனக் கொல்லி விதை நேர்த்தி செய்து பயிர்களை நோய்களிலிருந்து வருமுன் காக்க வேண்டுமென பழநி வேளாண்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## இன்றைய வேளாண் செய்திகள்

## ரூ.18 கோடியில் மணிமுத்தாறு அணை சீரமைப்பு பணிகள் தொடக்கம் விவசாயிகள் மகிழ்ச்சி



அம்பை,

மணிமுத்தாறு அணை சீரமைப்புக்கு, உலக வங்கி நிதியின் கீழ் ரூ.18 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் தொடங்கியுள்ளன. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**மணிமுத்தாறு அணை**

1952–ம் ஆண்டு பெருந்தலைவர் காமராஜர் முதல்–அமைச்சராக இருந்த போது, மணிமுத்தாறு அணை கட்டும் பணிகள் தொடங்கின. 1958–ல் பணிகள் முடிக்கப்பட்டு அணை திறந்து வைக்கப்பட்டது. 118 அடி கொள்ளளவு கொண்ட மணிமுத்தாறு அணை 9 ஆயிரத்து 605 அடி நீளம் கொண்டது. இதில் 1230 அடி கல்லணை எனப்படும் அணை, ஷட்டர் இருக்கும் பகுதியாகும். அணையில் மீதி இரு பக்கமும் 8 ஆயிரத்து 375 அடி நீளம் கொண்ட மண் அணையாகும்.

மணிமுத்தாறு அணையில் சுமார் 2 கி.மீ தூரத்துக்கு மழையினால் ஏற்பட்ட மண் அரிப்பு பகுதியை புனரமைத்தல், மேல் மண் அணையில் மழைநீர் வழிந்தோடிகள், மணிமுத்தாறு அணைக்கு செல்லக்கூடிய 4 கி.மீ சாலைகள் பராமரித்தல் என ரூ.5 கோடி மதிப்பில் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் மணிமுத்தாறு அணைநீர்த்தொட்டிகள் பராமரிப்புக்காக ரூ.9.65 கோடி மதிப்பில் திட்டப் பணிகள் உலக வங்கி அனுமதிக்காக காத்திருக்கிறது. அதற்கான ஒப்புதல் பெற்றவுடன் அந்த பணிகளும் நடைபெறும்.

**விவசாயிகளுக்கு மகிழ்ச்சி**

மேலும் ரூ.3½ கோடியில் ஷட்டர் பராமரிப்பு, தடுப்புவேலிகள் பணிகளும் நடைபெற்று வருகிறது. அணையை பொறுத்தவரை ஒரு பெருங்கால மதகும், 3 பிரதான கால்வாய்களும், 4 ஆற்று மதகுகளும், முழு கொள்ளளவை எட்டியதும் கல்லணையில் 7 ஷட்டர்களும் உள்ளன. சுமார் 58 ஆண்டுகளுக்கு பின்பு மணிமுத்தாறு அணை தற்போது புனரமைக்கப்படுவது விவசாயிகளிடையே பெருத்த மகிழ்ச்சியை

ஏற்படுத்தி உள்ளது. ஆனால் அணையின் அருகில் உள்ள பூங்கா, ஆண்டு முழுவதும் தண்ணீர் விழும் மணிமுத்தாறு அருவிக்கு செல்லும் பாதை போன்றவை புனரமைக்காமல் இருப்பது மக்களிடையே வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. அணையின் அருகில் உள்ள பூங்காவானது சில ஆண்டுகளுக்கு முன் கோடை விடுமுறையில் குழந்தைகளுக்கு சிறந்த பொழுதுபோக்கு இடமாக இருந்தது. தற்போது எந்தவித வசதியும் செய்யப்படாததால் குழந்தைகள் இல்லாமல் வெறுமனே காட்சியளிக்கிறது.

## வேளாண்மைத்துறை சார்பில் மன்னார்குடி பகுதியில் கோடைநெல் சாகுபடி கலெக்டர் மதிவாணன் ஆய்வு




மன்னார்குடி,

வேளாண்மைத்துறை சார்பில் மன்னார்குடி பகுதியில் கோடை நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதனை கலெக்டர் மதிவாணன் ஆய்வு செய்தார்.

கோடைநெல்சாகுபடி

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி வட்டத்தை சேர்ந்த சவளக்காரன், குமரபுரம், நீடாமங்கலம் வட்டத்தை சேர்ந்த காரக்கோட்டை, ராஜப்பையன் சாவடி ஆகிய பகுதிகளில் வேளாண்மைத்துறை சார்பில் கோடைநெல் சாகுபடி, பருத்தி சாகுபடி, உளுந்து, ஒருங்கிணைந்த பண்ணையில் வெள்ளரி சாகுபடி ஆகியவை செய்யப்பட்டுள்ளது. இதனை திருவாரூர் மாவட்ட கலெக்டர் மதிவாணன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர் இதுகுறித்து அவர் கூறியதாவது:-

தமிழக அரசு வேளாண்மையில் எந்திரமயமாக்கல் என்ற புதியதொழில் நுட்பத்தை புகுத்தி அதன் அடிப்படையில் விவசாயத்தை ஒரு புதிய தொழிலாக மாற்றி உற்பத்தியை பெருக்கி, விவசாயிகளின் வாழ்க்கை தரத்தை உயர்த்த முயற்சி மேற்கொண்டுள்ளது.

கூடுதல் விலை

விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த பணிகளை பல்வேறு நிலைகளில் ஆய்வு செய்வது மட்டுமில்லாமல் முன்னோடி விவசாயிகளின் வயல்களுக்கு சென்று பார்வையிட்டு, அவர்களை ஊக்கப்படுத்துவதும், விவசாய தொழிலில் இளைஞர்களை ஈடுபடுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பருத்தியை விற்பனை செய்திட விற்பனைத்துறை மூலம் 3 இடங்களில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் உள்ளன. இங்கு ஏலமுறையில் விற்பனை நடைபெறுவதால், விவசாயிகளுக்கு கூடுதல் விலை கிடைக்கிறது. இதனால் பருத்தி சாகுபடி பரப்பு நடப்பு ஆண்டில் அதிகரித்து உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்

ஆய்வின் போது வேளாண்மை இணை இயக்குனர் மயில்வாகணன், மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) பாண்டியராஜன், உதவி இயக்குனர் (வேளாண்மை) உத்ராபதி மற்றும் வேளாண்மை துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# நஞ்சை ஊத்துக்குளி வாய்க்காலுக்கு பாசனம் செய்யும் வகையில் சூரம்பட்டி வலசு அணைக்கட்டு சீரமைக்கும் பணிகள் தொடங்கியது



ஈரோடு,

நஞ்சை ஊத்துக்குளி வாய்க்காலுக்கு பாசனம் செய்யும் வகையில் சூரம்பட்டி வலசு அணைக்கட்டு சீரமைக்கும் பணிகள் தொடங்கி உள்ளது. இதையொட்டி அணையில் தேங்கி இருந்த தண்ணீர் பெரும்பள்ளம் ஓடைக்கு திறக்கப்பட்டது.

<u>நஞ்சை ஊத்துக்குளி வாய்க்கால்</u>

ஈரோடு மாவட்டத்தின் முக்கிய பாசனத்திட்டமாக இருப்பது கீழ்பவானி பாசனம். ஈரோடு, திருப்பூர், கரூர் ஆகிய 3 மாவட்டங்களை சேர்ந்த 2 லட்சம் ஏக்கர் நிலம் கீழ்பவானி பாசனத்திட்டத்தால் நேரடியாகவும், மறைமுகமாகவும் பயன்பெறுகிறது. குறிப்பாக முக்கிய வாய்க்கால்களில் இருந்து வெளியேறும் கசிவு நீரையும் பாசனத்துக்கு பயன்படுத்தும் வகையில் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் தடுப்பணைகள் அமைக்கப்பட்டு பாசனங்கள் செய்யப்பட்டு வந்தன.

இதுபோல் பாசனம் செய்வதற்காக ஈரோடு சூரம்பட்டி வலசு பகுதியில் பெரும்பள்ளம் ஓடையின் குறுக்கே தடுப்பணை கட்டப்பட்டு இருந்தது. கீழ்பவானி வாய்க்காலில் இருந்து வயல்களுக்கு பாய்ந்து ஓடையில்

வெளியேறும் சுமார் 3 ஆயிரம் கனஅடி தண்ணீரை சேமிக்கும் வகையில் 8 அடி உயரம் கொண்ட தடுப்பணையாக இது கட்டப்பட்டது. இங்கிருந்து காசிபாளையம், சாஸ்திரிநகர், லக்காபுரம் வழியாக நஞ்சை ஊத்துக்குளி வரை சுமார் 2 ஆயிரத்து 500 ஏக்கர் நிலம் பாசனம் பெற்று வந்தது.

வீணானது

விவசாய நிலங்களின் பரப்பளவு குறைந்து கட்டிடங்கள் அதிகரித்ததால் ஆங்காங்கே ஓடை அடைக்கப்பட்டது. ஓடை ஆக்கிரமிப்பு, சாக்கடை தேக்கம் என நஞ்சை ஊத்துக்குளி ஓடை வீணாக கிடந்தது. தண்ணீர் பாசனம் இல்லாததால் சாஸ்திரிநகர் முதல் நஞ்சை ஊத்துக்குளி வரை நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்தது.

இதற்கிடையே வாய்க்காலில் தண்ணீர் விட அதிகாரிகளும் போதிய நடவடிக்கை எடுக்காததால் வாய்க்கால் தூர்நிறைந்து வீணானது. மதகுகளும் உடைந்தன.

20–க்கும் மேற்பட்ட ஆண்டுகளாக இந்த நிலை நீடித்து வந்தது. மழைக்காலங்களில் பெருகி வரும் வெள்ளம் அணையை தாண்டி ஆர்ப்பரித்து ஓடும். மற்ற நேரங்களில் அணையில் தேங்கும் தண்ணீரில் ஆகாயத்தாமரை வளர்ந்து தண்ணீர் வீணாகும். இந்த நிலை விவசாயிகளையும், சமூக ஆர்வலர்களையும் வேதனையில் ஆழ்த்தியது.

ஆக்கிரமிப்புகள் அகற்றம்

எனவே நஞ்சை ஊத்துக்குளி வாய்க்காலுக்கு தண்ணீர் திறக்க வேண்டும். ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும் என்ற கோரிக்கைகள் சில ஆண்டுகளாக எழுப்பப்பட்டு வந்தன. இதற்கிடையே, இதுதொடர்பான ஒரு வழக்கில் ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும் என்று சென்னை ஐகோர்ட்டு ஈரோடு மாவட்ட நிர்வாகத்துக்கு உத்தரவிட்டது. அதன்பேரில் மாவட்ட கலெக்டர் எஸ்.பிரபாகர் உத்தரவின் பேரில், ஈரோடு ஆர்.டி.ஓ. நர்மதாதேவி மேற்பார்வையில் கடந்த 3 மாதங்களுக்கு முன்பு ஆக்கிரமிப்புகள் அகற்றும் பணி தொடங்கியது. சுமார் 900 வீடுகள் அகற்றப்பட்டன.

பின்னர் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டதால் பணிகள் சற்று தேக்கம் அடைந்தன.

பணிகள் தொடங்கியது

தற்போது தேர்தல் நிறைவடைந்து விட்டதால் நஞ்சை ஊத்துக்குளி வாய்க்காலுக்கு பாசன தண்ணீர் வழங்கும் வகையில் நடவடிக்கையை பொதுப்பணித்துறை அதிகாரிகள் தொடங்கி உள்ளனர்.

அதன்படி நேற்று அணையில் தேங்கி இருந்த தண்ணீர் முழுமையாக பெரும்பள்ளம் ஓடைக்கு திறக்கப்பட்டது. இதுபற்றி பொதுப்பணித்துறை அதிகாரிகள் கூறியதாவது:–

சூரம்பட்டி வலசு அணைக்கட்டு சீரமைக்கும் பணியில் விவசாய சங்கங்கள், ஒளிரும் ஈரோடு மற்றும் தொண்டு நிறுவனங்கள் நிதி உதவி செய்கின்றன. ஈரோடு பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் ராஜூ, உதவி செயற்பொறியாளர் ராதாகிருஷ்ணன் ஆகியோரின் ஆலோசனையின் பேரில் உதவிப்பொறியாளர் ஜெகதீசன் தலைமையிலான தொழில்நுட்பக்குழுவினர் பணிகளை செய்து வருகிறார்கள்.

முதல் கட்டமாக தண்ணீர் முழுமையாக வடிக்கப்படும். அதன்பின்னரே, அணைக்கட்டுக்குள் தேங்கி இருக்கும் சகதி அகற்றப்படும். அணையின் உயரமான 8 அடி முழுமையாக தூர்வாரப்பட்டு ஆகாயத்தாமரைகள் அனைத்தும் அழிக்கப்படும். இதுபோல் அணைக்கட்டு கரைகள் உறுதி செய்யப்படுவதுடன், மதகுகளும் சரி செய்யப்பட உள்ளன. இந்த பணிகள் நிறைவடைய 3 மாதங்கள் வரை ஆகலாம்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

**மீன்வளத்துறை மூலம் வளர்ச்சிப் பணிகள் கலெக்டர் ஆய்வு**



பனைக்குளம்,
ராமநாதபுரம் மாவட்டத்தில் மீன்வளத்துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சிப் பணிகளை கலெக்டர் நடராஜன் ஆய்வு செய்தார்.

<u>வளர்ச்சிப் பணிகள்</u>

ராமநாதபுரம் மாவட்டத்தில் கடலோரப்பகுதிகளில் அமைந்துள்ள மீனவ கிராமங்களில் வசிக்கும் மீனவர்கள் பயன்பெற ஏதுவாக முதல்–அமைச்சர் ஜெயலலிதா கடந்த ஆண்டு காணொலி காட்சி மூலம் ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள தங்கச்சிமடம், முகுந்தராயர்சத்திரம், பாம்பன், டி.மாரியூர், வேதாளை மற்றும் தனுஷ்கோடி ஆகிய இடங்களில் மொத்தம் ரூ.44.70 கோடி மதிப்பில் மீன்பிடி இறங்குதளம் அமைக்க அடிக்கல் நாட்டினார். அதனைத்தொடர்ந்து மீன்வளத்துறையின் சார்பாக அந்தந்த கிராமங்களில் மீன்பிடி இறங்குதளங்கள் அமைக்க பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் மாவட்ட கலெக்டர் நடராஜன் தங்கச்சிமடம் கிராமத்தில் ரூ.9.90 கோடி மதிப்பிலும், முகுந்தராயர் சத்திரம் கிராமத்தில் ரூ.7.10

கோடி மதிப்பிலும், தனுஷ்கோடி கிராமத்தில் ரூ.8 கோடி மதிப்பிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் மீன்பிடி இறங்கு தளம் அமைக்கும் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இதில் தங்கச்சிமடம் மீன்பிடி இறங்குதளத்தில் 63 சதவீத கட்டுமான பணிகளும், முகுந்தராயர் சத்திரம் மீன்பிடி இறங்குதளத்தில் 68 சதவீத கட்டுமான பணிகளும், தனுஷ்கோடி மீன்பிடி இறங்குதளத்தில் 17 சதவீத கட்டுமான பணிகளும் நடந்துள்ளன. இந்த கட்டுமான பணிகளை விரைவாக மேற்கொண்டு காலதாமதமின்றி நிறைவேற்ற வேண்டும் என மீன்வளத்துறை அலுவலர்களுக்கு கலெக்டர் அறிவுரை மற்றும் ஆலோசனைகளை வழங்கினார்.

மிதவை கூண்டு

தொடர்ந்து தங்கச்சிமடம் கிராமத்தில் மீன்வளத்துறையின் சார்பாக மாநில சமச்சீர் நிதித்திட்டத்தின்கீழ் ரூ.99.70 லட்சம் மதிப்பில் செயல்படுத்தப்பட்டு வரும் மிதவை கூண்டு மீன் வளர்ப்பையும், ராமநாதபுரம் கலெக்டர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் ரூ.1.80 கோடி மதிப்பில் புதிதாக கட்டப்பட்டு வரும் மீன்வளத்துறையின் ஒருங்கிணைந்த அலுவலக கட்டிடத்தின் கட்டுமான பணிகளையும் கலெக்டர் ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது மீன்வளத்துறை துணை இயக்குனர் காசிநாத பாண்டியன், உதவி இயக்குனர் கோபிநாத், உதவி செயற்பொறியாளர் தர்மராஜ் உள்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

## தஞ்சை மாவட்டத்தில் பாய்நாற்றங்கால் அமைத்து எந்திரம் மூலம் குறுவை நடவு கலெக்டர் சுப்பையன் நேரில் ஆய்வு



தஞ்சாவூர்,

தஞ்சை மாவட்டத்தில் பாய்நாற்றங்கால் அமைத்து எந்திரம் மூலம் நடவு செய்வதை கலெக்டர் சுப்பையன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்

எந்திரம் மூலம் நடவு

தஞ்சை மாவட்ட வேளாண்மைத்துறை சார்பில் குறுவை தொகுப்புத் திட்டத்தின் கீழ் டவுன் கரம்பை கிராமத்தில் சிவபிரகாசம் என்ற விவசாயியின் நிலத்தில் பாய் நாற்றங்கால் அமைத்து எந்திரம் மூலம் குறுவை நடவு செய்வதையும், அம்மாப்பேட்டை தாலுகா ராராமுத்திரக்கோட்டை கிராமத்தில் சுவாமிநாதன் என்பவரின் விவசாய நிலத்திலும் பாய் நாற்றங்கால் அமைப்பதையும் கலெக்டர் சுப்பையன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர் அவர் கூறியதாவது:–

முதல்–அமைச்சர் ஜெயலலிதா குறுவை சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகளை ஊக்குவிக்கும் பொருட்டு, “குறுவை சாகுபடி தொகுப்புத் திட்டம்–2016“ அறிவித்துள்ளார். தஞ்சை மாவட்டத்தில் குறுவை பருவத்தில் 2016–ம் ஆண்டில் 80 ஆயிரத்து 625 ஏக்கர் பரப்பு நடவு

செய்ய திட்டமிடப்பட்டு, இதுவரை 24 ஆயிரத்து 625 ஏக்கர் பரப்பில் நடவு செய்யப்பட்டுள்ளது.

<u>மும்முனை மின்சாரம்</u>

மேலும் குறுவை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, 12 மணி நேர மும்முனை மின்சாரம், மற்றும் பாய்நாற்றங்கால் அமைத்து எந்திர நடவு செய்ய உள்ள விவசாயிகளுக்கு 40 ஆயிரம் ஏக்கர் பரப்பிற்கு, 100 சதவிகித மானியத்தில் ஏக்கருக்கு ரூ.4 ஆயிரம் பின்னேற்பு மானியமாக வேளாண்மைத் துறையின் மூலம் வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்படும்.

மேலும், நெல் உற்பத்தி பெருக்கும் காரணிகளான விலையில்லா நுண்ணூட்டக் கலவை ஏக்கருக்கு 5 கிலோ மற்றும் துத்தநாக சல்பேட் ஏக்கருக்கு 10 கிலோ என்ற அளவில் முறையே 12 ஆயிரம் ஏக்கர் மற்றும் 30ஆயிரம் ஏக்கர் பரப்பிற்கு வேளாண் விரிவாக்க மையங்களின் மூலம் வழங்க இலக்கு பெறப்பட்டுள்ளது. மேலும், பாசன நீரை சிக்கனமாக உபயோகப்படுத்த 250 யூனிட் நீர் கொண்டு செல்லும் 6 மீட்டர் நீளமுள்ள 30 குழாய்கள் வழங்கப்படும்.

<u>ஆலோசனை</u>

இந்த ஆண்டு சிறப்புத் திட்டமாக குறுவை சாகுபடி செய்ய இயலாத விவசாயிகளுக்கு பயறு வகைப் பயிர்கள் சாகுபடி செய்ய ஏக்கருக்கு ரூ.1400– மதிப்பில் உழவு மானியமும், 8 கிலோ விதையும், 8 ஆயிரம் ஏக்கருக்கு வழங்க இலக்கு பெறப்பட்டுள்ளது. வேளாண்மை துறை அலுவலர்கள் களப்பணியில் சிறப்பாக செயல்பட்டு வருகின்றனர். விவசாயிகள், வேளாண்மை துறை அலுவலர்களிடம் ஆலோசனை பெற்று முதல்–அமைச்சர் ஜெயலலிதா வழங்கி உள்ள குறுவை தொகுப்பு திட்டத்தினை முழுமையாக பெற்று பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

அப்போது வேளாண்மை இணை இயக்குநர் (பொ) சீனிவாசன், துணை இயக்குனர்கள் இளஞ்செழியன், சொக்கலிங்கம், மற்றும் வேளாண்மை துறை அலுவலர்கள், விவசாயிகள், பொது மக்கள் கலந்து கொண்டனர்.